குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் 26ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய ஆசியுரை

திருச்சிற்றம்பலம்

புராணம்:

புராணம் என்ற சொல், பழமை என்னும் பொருளைக் குறிப்பது. பழமையானாலும் புதுமையாகவும் விளங்குவது.

பூரணனாகிய பெருமானிடமிருந்து வந்தமையால் பூரணம் என வழங்கி, பின்னர் அச்சொல்லே புராணம் எனத் திரிந்தது என்றும் கூறுவர். புராபிநவம் - பூரணம் எனக் கொண்டு, புராதனமாயும் புதுமை யாயும் உள்ளது எதுவோ, அதுவே புராணம் என்று ஆயிற்று என்றும் கொள்வர்.

"முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே" (தி.8 ப.7 பா.9) என்னும் மணிவாசகரின் திருவாசகமே இதற்குப் போதிய சான்றாகும். மேலும் பழமையிலிருந்துதான் புதுமை தோன்ற முடியும் என்பதையும் ஊன்றி உணர்வோர் இவ்வுண்மையை உணர்வர்.

மேலும் அப்பர், பூவனூர்த் தேவாரத்தில்,

நார ணன்னொடு நான்முக னிந்திரன்

வார ணன்கும ரன்வணங் கும்கழற்

பூர ணன்திருப் பூவனூர் மேவிய

கார ணன்னெனை யாளுடைக் காளையே. (தி.5 ப.65 பா.10)

என்று பாடுவதாலும், திருக்காளத்தித் திருத்தாண்டகத்தில்,

"நாரணன் காண், நான்முகன்காண் நால்வே தன்காண்

ஞானப் பெருங்கடற்கோர் நாவாய் அன்ன

பூரணன்காண் புண்ணியன்காண் புராணன் தான்காண்"

(தி.6 ப.8 பா.3) என்று போற்றுவதாலும் இவ்வுண்மையைத் தெளியலாம்.

புராணம், பழமையானது என்ற பொருளைத் தரும்; புராதனம் என்ற சொல்லின் மரூஉ மொழியே புராணம். எல்லாருக்கும் முன்னே தோன்றி முளைத்தவனாகிய சிவபெருமானைப் புராணன் எனத் தேவாரத் திருமுறைகள் கூறுகின்றன. "புண்டரிகக் கண்ணானும் பூவின் மேலைப் புத்தேளும் காண்பரிய புராணன் தான்காண்" (தி.6 ப.30 பா.9) என அப்பர் பெருமான் அருளிச் செய்கின்றார்.

இலக்கிய வகைகளில், பழமையான வரலாறுகளை உணர்த்தும் நூல், புராணம் எனப் பொருள் தரும். வேத சிவாகமங்களையடுத்துப் பதினெண் புராணங்கள் சிறப்புடையனவாகப் போற்றப் பெறும்.

கடவுட் கொள்கையில் ஊன்றி நிற்றற்கும், சமய உண்மைகளை உணர்தற்கும், உலகியலில் அறநெறி வழுவாது வாழ்தற்கும் புராணங் களைப் படித்தல் இன்றியமையாததாகும். இவை வடமொழியில் அமைந்துள்ளனவாயினும், இவற்றின் கதைக்கூறுகள் சங்கநூல்கள் தொடங்கி அனைத்துத் தமிழ்நூல்களிலும் எடுத்தாளப்பட்டுள்ளன.

வேத சிவாகமங்கள் இறைவனால் அருளிச் செய்யப் பெற்றன போலப் பதினெண் புராணங்களும் அவ்விறைவன் திருவுள்ளப் பாங்கின்படியே தோன்றலாயின என்பதைத் திருஞானசம்பந்தர், திருவையாறு தேவாரத் திருப்பதிகத்தில்,

எங்கு மாகிநின் றானு மியல்பறி யப்படா

மங்கை பாகங்கொண் டானு மதிசூடு மைந்தனும்

பங்க மில்பதி னெட்டொடு நான்குக் குணர்வுமாய்

அங்க மாறுஞ்சொன் னானுமை யாறுடை யையனே. (தி.2 ப.6 பா.6)

என அருளிச் செய்கின்றார். இப்புராணங்களைப் புடை நூல்கள் எனநு சிவஞான சித்தியார் கூறுகிறது.

அருமறையா கமம்முதல்நூல் அனைத்துமுரைக் கையினால் அளப்பரிதாம் அப்பொருளை அரனருளால் அணுக்கள்

தருவர்கள்பின் தனித்தனியே தாமறிந்த அளவில்

தர்க்கமொடுத் தரங்களினால் சமயம்சா தித்து

மிருதிபுரா ணம்கலைகள் மற்று மெல்லாம்

மெய்ந்நூலின் வழிபுடையாம் அங்கம்வே தாங்கம்

சுருதிசிவா கமமொழியச் சொல்லுவதொன் றில்லை சொல்லுவார் தமக்கறையோ சொல்லொ ணாதே (சித். சூ. 8 பா. 14)

பதினெண் புராணங்கள்:

சிவபெருமான் அம்மைக்கு உபதேசித்த பதினெண் புராணங் களையும் இடையில் வீற்றிருந்த முருகப் பெருமான் கேட்டு, அதைச் சனற்குமாரருக்கு உபதேசிக்க, அவர் அகத்திய முனிவருக்கு உபதே சிக்க, அவர் வியாசருக்கு உபதேசிக்க, அவர் தம் மாணாக்கர் சூத முனிவருக்கு உபதேசிக்க, சூத முனிவர் பதினெண் புராணங்களையும் நைமிசாரணிய முனிவர்கட்கு உபதேசித்து, அஃது உலகில் பரவியது என்பதே புராண வரலாறு.

இந்த அமைப்பிலேயே பதினெண் புராணங்கள் தோன்ற லாயின. பதினெண் புராணங்களாவன,

1. பிரம புராணம், 2. பதும புராணம்,

3. விட்டுணு புராணம், 4. சிவ புராணம்,

5. பாகவத புராணம், 6. நாரதீய புராணம்,

7. மார்க்கண்டேய புராணம், 8. ஆக்கினேய புராணம்,

9. பவிஷ்ய புராணம், 10. பிரமவைவர்த்த புராணம்,

11. இலிங்க புராணம், 12. வராக புராணம்,

13. ஸ்கந்த புராணம், 14. வாமன புராணம்,

15. கௌமார புராணம், 16. மச்ச புராணம்,

17. கருட புராணம், 18. பிரும்மாண்ட புராணம்

என்பனவாம். இப்பதினெட்டும் மகாபுராணங்கள் எனப்படும்.

இவ்வாறே உபபுராணங்கள் பதினெட்டும், அதிபுராணங்கள் பதினெட்டும் உள்ளன.

கந்த புராணம்:

பதினெண் புராணங்களில் சிவ புராணங்களாக விளங்குவன பத்தாகும். அவற்றுள் ஒன்றான ஸ்காந்த புராணம், 50 காண்டங்களைக் கொண்டதாய், ஓரிலட்சம் கிரந்தங்களை உடையதாய் விளங்குவது.

சனற்குமார சங்கிதை, சூத சங்கிதை, பிரம சங்கிதை, விட்டுணு சங்கிதை, சங்கர சங்கிதை, சூர சங்கிதை என்ற ஆறு சங்கிதைகளை உடையது.

அவற்றுள் சங்கர சங்கிதை முப்பதாயிரம் கிரந்தங்களைக் கொண்டது. பன்னிரு காண்டங்களுடன் விளங்குவது. அவற்றுள் பதின்மூவாயிரம் கண்டங்களைக் கொண்ட சிவரகசிய காண்டத்தில் முருகன் வரலாறு - உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தக்ஷ காண்டம், உபதேச காண்டம் என்ற ஏழு காண்டங்களைக் கொண்ட இப் பகுதியை மூலமாக வைத்தே, கச்சியப்ப சிவாசாரியார் கந்த புராணத்தைப் பாடியுள்ளார்.

திருவிளையாடற் புராணம்:

பதினெண் புராணங்களில் ஒன்றான ஸ்காந்த புராணத்தில், சங்கர சங்கிதை, சிவபிரான் உமையம்மைக்குச் சொன்னதாகச் சொல்லப் பெறுவது. அவ்வாறு சொன்னபோது, தாயின் மடியிலிருந்து கேட்ட முருகன் அதனை அகத்தியருக்குச் சொன்னார். அதனால் அச் சங்கிதை, அகத்திய சங்கிதை எனவும் வழங்கப் பெறுகிறது. அச் சங்கிதையுள் விளங்குவது ஆலாசிய மகாத்மியம் (ஆலாசியம் - திருவாலவாய்) இஃது 71 அத்தியாயங்களைக் கொண்டது; 6,085 சுலோகங்களை உடையது. இதனுள் 4ஆவது அத்தியாயம் முதலாகச் சிவனின் திருவிளையாடல்கள் கூறுப்பெறுகின்றன. முதல் மூன்று அத்தியா யங்கள், மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகியவற்றின் பெருமைகளைக் கூறுகின்றன. ஏனைய அத்தியாயங்கள் ஆலவாய் இறைவனின் அருள் விளையாடல்களைத் தெரிவிக்கின்றன.

தமிழ்த் திருவிளையாடற் புராணத்துக்கு மூலநூல் வடமொழி யில் அமைந்த ஆலாசிய மகாத்மியம் ஆகும்.

முப்புராணங்கள்:

முப்புராணங்களாவன: பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், கந்த புராணம் என்பனவாகும். இவை மூன்றும் சிவபெரு மானின் மூன்று கண்களாகப் போற்றப் பெறுவன. சூரியகுலத் தோன்றல்களாகிய சோழர்கள் காரணமாகத் தோன்றியதால், சிவபெருமானின் வலது கண்ணாகப் பெரியபுராணம் போற்றப்படுகிறது.

சந்திர குலத்தோன்றல்களாகிய பாண்டியர்கள் காரணமாகத் தோன்றியதால், சிவபெருமானின் இடது கண்ணாகத் திருவிளையா டற் புராணம் போற்றப்படுகிறது.

சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய முருகப் பெருமான் வரலாறு கூறுவதால், சிவபெருமானின் அக்கினிக் கண் ணாகக் கந்தபுராணம் போற்றப்படுகிறது.

பெரியபுராணம், மனிதன் குறிக்கோளுடன் வாழவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுகிறது. திருவிளையாடற் புராணம் மனிதன் பக்தியுடன் வாழவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. கந்தபுராணம், மனிதன் நன்றியறிதலுடன் வாழவேண்டும், இல்லையேல் கடுந்தண் டனையை அநுபவிக்க நேரிடும் என்பதை வலியுறுத்திக் கூறுகிறது.

பெரியபுராணம், சிவபெருமானின் அருமைப்பாட்டை அறிவிக் கிறது. திருவிளையாடற் புராணம் சிவபெருமானின் எளிவந்த கருணையை வெளிப்படுத்துகிறது. கந்த புராணம் அக்கினிக் கண்ணுக் கேற்பக் கடுமையைக் காட்டித் திருத்துவதாய் உள்ளது.